புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# புறநானூற்றில் இயற்கைச் சூழல்

முனைவர்.கி.சுதாதேவி
உதவிப்பேராசிரியர்
திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி
திருப்பூர்-641687

## ஆய்வு சுருக்கம்

தமிழ் மொழியின் தனித்துவத்திற்குச் சான்றாய் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைக்கும் முகமாய் சங்க இலக்கியப் பாடல்கள் விளங்குகின்றன. இச்சிறப்பு வாய்ந்த சங்கப்பாடல்களில் 'இயற்கை' பின்புலமாக அமைந்து காணப்படுகின்றன. சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்ததோடு நில்லாமல் பேணும் முறையையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்துள்ளனர். அவற்றுள் பண்டைத் தமிழர்களின் வாழ்வை எடுத்துரைக்கும் புறநானூற்றில் அமைந்துள்ள இயற்கைச் சூழலை இனம் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

செவ்வியல் இலக்கியங்களாகத் திகழும் சங்க நூல்கள் மக்களின் வாழ்வியலைத் தன்னகத்தே அடக்கியுள்ளன. இன்றைய சூழலில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக உலகம் முழுவதும் மாசுபட்டுள்ளது. அம்மாசு வரும் தலைமுறையினருக்குப் பெருந்தீங்கை ஏற்படுத்தும் என்ற விழிப்பு நிலையை உணர்த்துவது அவசியமாகிறது. அவ்வகையில் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் கடமையாகும். அதற்கு நம் பழந்தமிழ் இலக்கியங்கள் இயற்கையை எவ்வாறுபோற்றிப் பாடியுள்ளன என்பதையும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. அவ்வகையில் சங்க வாழ்வியலில் மக்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலை இனம் காண்பதே இக்கட்டுரையாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

ஆய்வுக்கட்டுரையில் பகுப்பாய்வு மற்றும் தொகுப்பாய்வு ஆகிய இரு நெறிமுறைகள் பின்பற்றுள்ளன. புறநானூற்றில் அமைந்துள்ள இயற்கைச் சூழலை இனம்கண்டு பகுத்தும் தொகுத்தும் உரைக்கப்பட்டுள்ளது.

## 'இயற்கை' விளக்கம்

'இயற்கை' என்பது நம் வார்த்தைகளால் அடக்கிவிட முடியாத ஒன்று. காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து பழந்தமிழர் இலக்கியங்களிலும் பரந்து காணப்படுகின்றது. தமிழரின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியம்

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'
(தொல்.கிளவி.நூ.எண்:19)

என்னும் நூற்பாவில் இயற்கை என்பதனை 'இயல்பு' என்னும் பொருளில் விளக்குகிறது. கழகத்தமிழ் அகராதி

'இலக்கணம், பான்மை, சுபாவம், வர்க்கம், நிலைமை
கொள்கை, இயல்பு, குணம் ,தகுதி, திராணி, முறைமை' (ப.எண்:113)

என்று விளக்கம் தருகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

'மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலை நீர்)

*போன்ற பொருள் அல்லது (மழை நீர் இடி காற்று) போன்ற சக்தி'*
*(க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி-ப.எண்:101 )*

*என்று பொருள் தருகிறது. பழந்தமிழர் வாழ்வில் இன்றிமையாக் கூறாக இயற்கை இருந்தமையை இவ்விளக்கத்தால் உணரலாம். இன்று நாம் காணும் சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழரிடத்தும் இருந்ததை நம் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. நிலம், நீர்,நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது மட்டுமல்லாது உலகம் என்பது இயற்கையின் பாற்பட்டது என்பதையும் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். இதனைத் தொல்காப்பியர்*

*'நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' (தொல்.பொருள்.நூ.எண்:1539)*

*என்னும் நூற்பாவில் இப்பூமியானது ஐம்பெரும்பூதங்களையும் உள்ளடக்கியது என்கிறார். இதேபோன்று புறநானூறும்*

*'இரு முந்நீர்க் குட்டமும்*
*வியன் ஞாலத்து அகலமும்*
*வளி வழங்கு திசையும்*
*வறிது நிலைஇய காயமும் என்றாங்கு..' (புறம்-20)*

*உயர் பண்புகளுக்கு இணையானது எனக் கடல், காற்று , ஆகாயம் மூன்றையும் குறிப்பிட்டுள்ளது. மேலும்*

*'மண் திணிந்த நிலனும்*
*நிலம் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு..' (புறம்-2)*

*என மண் நிறைந்த நிலம். நிலத்தை ஏந்திய வான். ஆகாயத்தின் வழி வரும் காற்று. காற்றில் கலந்து வரும் தீ. தீயில் உள்ள நீரும் கலந்தது உலகம் என்பதோடு ஐம்பூதங்களாகிய இயற்கையால் படைக்கப்பட்டது உலகம் என்பதையும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை சங்ககால மக்கள் வாழ்தனர் என்பதையும் அறியலாம்.*

வானியலறிவு

*பழந்தமிழர்கள் இயற்கையினைக் கடவுளாக எண்ணி வழிபாடு செய்தனர். பூதங்களில் அவற்றுள்ளும் குறிப்பாக ஞாயிறு வழிபாடு தொன்மை வழிபாடாக இருந்து வந்துள்ளது. புறநானூற்றில் ஞாயிற்றின் தோற்றம், ஞாயிறு இயங்கும் முறை ஆகியன பற்றிய குறிப்பைக் காண்கிறோம்.*

*'ஞாயிற்றுச் செலவும்*
*அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சேர்ந்த மண்டிலமும்*
*வளி திரிதரு திசையும்*
*வறிது நிலைஇய காயமும்' (புறம்-30)*

*இப்பாடல் வழி சூரிய வட்டம், சூரியனின் இயக்கம், வான்வளி மண்டலம் குறித்த அறிவு அன்றே நம் பழந்தமிழரிடையே இருந்தமையை அறியலாம். பண்டைத் தமிழர்கள் பல துறைகளிலும் வல்லவர்களாக இருந்துள்ளனர். விண்வீழ் கொள்ளி விழுந்தவுடன் ஏழாம் நாளில் சேர மன்னன் இறந்துபட்டான் என்பதை*

*பங்குனி உயர் அழுவத்து*
*தலை நாள்மீன் நிலை திரிய*
*நிலை நாள்மீன் அதன் எதிர் ஏர்தர' (புறம்-229)*

*கூடலூர் கிழார் பாடியுள்ளார். வானில் மீனின் நகர்வும், விண்மீனின் வீழ்வதையும், வீழ்ந்தால் நடைபெறும் துன்பத்தைப் பற்றிய அறிவையும் பெற்றிருந்தனர் என்பதை அறியலாம்.*

*வெள்ளிக்கோள் மழைக்கோள் என்று கருதப்பட்டு அது செல்லும் பாதையினைக் கொண்டு வறட்சி தோன்றுவதையும் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன.*

*'வெள்ளித் தென்புலத் துறைய விளைவயற்*
*புள்ளம் வாழய பயனில் காலை' (புறம்-388)*

என்னும் பாடல் வரி வெள்ளிக் கோளானது தென்புலத்தில் மறைந்ததால் நீரின்றி விளை வயல்கள் வாடிக்கிடக்கின்றன என்பதையும், வானில் கோள்களின் இடையே நடைபெறும் மாற்றத்தை சங்கத் தமிழர்கள் உணரும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தனர் என்பதையும் அறியலாம். மழை உருவாகும் விதம் தெளிந்த குடிநீர் ஆகியன பற்றிய தெளிவான விளக்கங்கள் சங்க இலக்கியங்களில் நிறைந்து காணப்படுகின்றன. சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் வானியல் பற்றிய அறிவு இருந்தமையை அறியலாம்.

*நீரும் நிலனும்*

நிலம் என்பது உடம்பு. நீர் என்பது உயிர். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பது திருமூலர் கூற்று. நிலம் எனப்படும் உடம்பு அழியாமல் காக்கப்பட வேண்டுமாயின் நீர் நிலைகளாக உயிரைப் பேணவேண்டும் என்று பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். இதனைப் புறநானூறும்

'நீர் இன்று அமையா யாக்கைக் கெல்லாம் உண்டி
கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (புறம்-18)

மெய்ப்பிக்கின்றது. 'மழைத் துளியின்றி பசும்புல்லும் தலைகாட்டாது' என்பார் வள்ளுவர். 'நீரான் வீறு எய்தும் விளைநிலம்' என நீர் நிறைந்த நிலத்தின் சிறப்பை நான்மணிக்கடிகை விளக்குகிறது. அதேபோன்று பழந்தமிழர் குளம் தொட்டு வளம் பெருக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர் என்பதனை

'நிலன்நெளி மருங்கில் நீர்நிலை
பெருகத் தடடோர் அம்ம இவண் தட்டாரே' (புறம்-18)

என்ற பாடல் மூலம் அறியலாம். அதேபோன்று

'அறையும் பொறையும் மணந்தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரை
தெண்ணீர்ச் சிறுகுளம்' (புறம்-118)

எனும் பாடலில் எட்டாம் நாளில் தோன்றும் பிறை போன்ற வளைந்த தோற்றமுடைய கரையைக் கொண்டு குளம் கட்டப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தினர் என்பதை அறியலாம். பருவ மழைக்காலங்களில் பெருக்கெடுக்கும் வெள்ளம் பொருளாதார சேதங்களை ஏற்படுத்திக் கடலில் கலக்கிறது. கோடை காலங்களில் பெரும் வறட்சி. இவ்விரு பிரச்சனைகளுக்கும் தீர்வாக நீர்நிலைகளை உருவாக்குதல் என்பதை சங்ககால மக்கள் அறிந்திருந்தனர். பருவம் மாறி மழை பொய்க்கும் காலத்தும் பேரிடர் காலத்தும் மக்களைப் பாதுகாப்பதோடு உழவர்களுக்கான நீர் வளத்தை மழையில்லா காலத்து வழங்குவதே நல்லரசு என்பதை

'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்' (புறம்-35)

இப்பாடல் உணர்த்துவதை அறியலாம்.

இக்காலத்தில் தொழில் நுட்பத்தின் துணைகொண்டு இயற்கையால் விளையும் இன்னல்களும் இடர்பாடுகளும் மக்களுக்கு ஊறுவிளைவிக்காமல் ஆற்றின் மேல் அணைகட்டி ஏரிகள் குளங்கள் ஆகியவற்றை நிரப்பி பெரிய நீர்த்தேக்கங்களை அமைத்துள்ளோம். ஆனால் எத்தகைய தொழில் நுட்ப வளர்ச்சியும் இல்லாத காலகட்டத்திலும் சங்ககால மக்கள் நீர்நிலைகளைப் பயன்படுத்தியதோடு மட்டுமின்றி அவற்றின் அவசியம் கருதி அவற்றைப் பேணிபாதுகாத்தும் உள்ளனர். இவ்வாறு இயற்கையாய் அமைந்த பாறைகளையும் மண் திட்டுகளையும் வளைத்துத் தேவையான இடங்களில் நீர்த்தேக்கங்களை உருவாக்கிக் கொள்ளும் திறமை நம் பண்டைத் தமிழர்களிடம் இயல்பாகவே இருந்ததைக் காணலாம்.

*காற்று*

வாயு எனப்படும் காற்றை ஒவ்வொரு நாட்டினரும் கடவுள்களின் குழந்தையாகவே கருதினர். மேனாட்டார் அறியாத காலத்திலேயே காற்றின் பல்வேறு தன்மைகளைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர்.

'காற்றோடு எரி நிகழ்தன்ன செலவின்'(புறம்-41)

எனக் காற்று கலந்ததால் தீ விரைவாக எரியும் என்ற அறிவியல் உண்மையை உவமையாகக் கோவூர்கிழார் குறிப்பிட்டுள்ளார். வரிவிதிப்பை நீக்கும் பொருட்டு அறிவுரை கூறும் புலவர்

*வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் வேந்தனிடம் வரிவிதிப்பை நீக்குமாறு வேண்டிய போது அவர் பழந்தமிழர் எல்லையையும் வேந்தர் சிறப்பையும் குறிப்பிடும் வகையில் கடல்களால் சூழப்பெற்ற காற்று வழங்காத வானத்தின் கீழ் உள்ள நிலத்தை ஆளும் வேந்தர் என*

*'நளிஇரு முந்நீர் ஏணியாக*
*வளிஇடை வழங்கா வானம் சூடிய*
*மண்திணிக் கிடக்கை' (புறம்-35)*

*குறிப்பிடுகின்றார். புலவர் குறுங்கோழியூர் கிழார் 'வளி வழங்கு திசை'(புறம்-20) எனக் காற்று வழங்கும் திசை பற்றிக் குறிப்பிடுகின்றார். அதேபோன்று புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 'வளி திரிதரு திசை'(புறம்-30) என்றும் 'வளிப்புடைத்த கலம் போல'(புறம்-26) என்றும் குறிப்பிடுகின்றார். காற்றின் இயல்பையும் அதன் இயக்கத்தையும் அறிந்து ஆளுமை பெற்ற மன்னர்கள் என மன்னனை வாழ்த்தும் இடத்தும் புறநானூற்றுப் பாடலில் காற்றினைப் பற்றிய குறிப்பு காணப்படுவதைக் அறியலாம்.*

*நெருப்பு*

*சங்கப் புலவர்கள் மன்னனது குணங்களை ஐம்பெரும் பூதங்களின் ஆற்றலோடு ஒப்பிட்டு பாடுவது மரபு. தீ போல எதிரிகளை அழிப்பவன் காற்று போன்ற வேகம் உடையவன் ஆகாயம் போன்ற சர்வ வல்லமை உடையவன் பூமி போன்று பொறுமையும் உறுதியும் உடையவன் என்று போற்றிப் பாடியுள்ளனர். புறநானூற்றுப் புலவர்களும் பஞ்சபூதங்களைப் போற்றியுள்ளனர். காற்றினை இயற்கையாக மேனாட்டார் கருதாக் காலத்திலேயே காற்றின் பல்வேறு தன்மைகளைப் பழந்தழர் அறிந்திருந்தனர்.*

*விசும்பு தைவரு வளியும்*
*வளி தலைஇய தீயும் (புறம்-2)*

*எனும் பாடலில் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் விண்ணில் உழலும் காற்றையும் தீயைப் பற்றி பரவச் செய்யும் அதன் ஆற்றலைப் பாடியுள்ளதைக் காணலாம். புலவர் கோவூர் கிழார் காற்று நெருப்புடன் இணைந்து எரிக்கும் ஆற்றலைக் 'காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவின்'(புறம்-41) எனக் காற்று கலந்தால் தீ விரைவாக எரியும் என்ற அறிவியல் உண்மையை உவமையாகக் கூறுகிறார் கோவூர்கிழார்.*

*முடிவுரை*

*செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் பஞ்சபூதங்களின் ஆற்றல் அவை தொடர்பான சிந்தனைகள் நிறைந்து காணப்படுகின்றன. உலக இயக்கம் ஞாயிறு மண்டலம் ஆகியன பற்றி அறிந்த வானவியல் சிந்தனையாளர்கள் இருந்தனர் னெ;பது குறித்தும் நிலம் நீர், வான், காற்று, நெருப்பு போன்ற பஞ்ச பூதங்களின் ஆற்றல் குறித்தும் விளக்கியிருப்பதை அறியலாம். 'வீங்கும் கடல்நீரில் தீவுகள் தலைமுழுங்கு என்றார் புதுக்கவிஞர். இன்றைய சூழலில் பருவம் மாறி மழை பெய்வது இயல்பாய் உள்ளது. ஆதலால் அடுத்த தலைமுறையினருக்கு இயற்கையின் அழகை, ஆற்றலை நம் இலக்கியங்கள் வழி உணர்த்துவதோடு நாமும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்வோமாக.*

*துணை நின்ற நூல்கள்*

*1.கழகத் தமிழ் அகராதி - (ப.எண்:431)கழக வெளியீடு-1998 -திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*
*2.க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி-1992 (ப.எண்:408) - க்ரியா வெளியீடு , சென்னை*
*3.தொல்காப்பியம் – பொருளதிகாரம்-1995 - பொருளதிகாரம் - முல்லை நிலையம், சென்னை*
*4.புறநானூறு[-கழக வெளியீடு-1968 -திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*

********* ********* ********** ********* ********* ********** ********** **********